கின்றது. மேலும் கடந்த 20 நாட்களாக அப்படியே வேலையை விட்டுவிட்டுச் சென்று விட்டார்கள். ஆகவே மேற்கொண்டு அந்த வேலையைத் தொடர்ந்து நடத்தி துரிதப்படுத்திக் கொடுப்பதற்கு என்ன ஆலோசனைகள் கூறப்பட்டுள்ளன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, எடுக்கப்பட்ட ஊராட்சி ஒன்றியங்களில் தன்னிறைவுத் திட்ட வேலைகள் 31-3-81-க்குள் முடிக்கவேண்டும் என்று ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு அது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. ஆனால் ஒருசில இடங்களில் குறிப்பாக நீலகிரி போன்ற இடங்களில் இதுபோன்ற வேலைகள் தேங்கி இருக்கின்றன. அவைகளுக்கெல்லாம் மீண்டும் காலக்கெடு கொடுத்து வேலைகளை முடிப்பதற்கு உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே எங்கெங்கு தேக்கநிலை ஏற்பட்டிருந்தாலும் அவைகளைப் போக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பாம்பாற்றின் குறுக்கே புதிய பாலம் கட்டும் திட்டம்

* வினா எண் 761- திரு. ப. சுந்தரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வடாற்காடு மாவட்டம் ஆலங்காயம் நெடுஞ்சாலையில் வவ்வால்-தோப்பு என்கிற புதூருக்கு போகும் சாலையின் குறுக்கே போகும் பாம்பாற்றின் மீது புதியதாகப் பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் இதை விரைவில் கட்டி முடிக்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) இல்லை. (ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. ப. சுந்தரம்: தலைவரவர்களே, நீண்ட நெடுங் காலமாக இந்தப் பாலம் வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். ஜவ்வாது மலையின் அடிவாரத்திலே உள்ள பகுதிகளிலே வாழ்கின்ற விவசாயிகள் மழைக் காலங்களிலே ஆற்றிலே வெள்ளம் வந்துவிடுவதன் காரணத்தால் தங்களுடைய விளை பொருட்களைக்கூட நகரங்களுக்கு எடுத்துச் செல்ல முடியாமல் கஷ்டப்படுகின்ற சூழ்நிலை ஏற்படுகின்றது. ஆகவே அரசு மீண்டும் பரிசீலனை செய்து உடனடியாக அந்தப் பாலத்தினைக் கட்டி முடிக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லக்கூடிய இடத்திலே பாலம் கட்ட வேண்டுமென்றால் ஏறத்தாழ ரூ. 5 இலட்சம் செலவாகும். அது 3 கிலோமீட்டர்தான் நீளமுள்ள ஒரு சாலை ஆகவே, நிதிநிலை சரியான உடன் அவைகள் எல்லாம் கவனிக்கப்படும்.

கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை.

*வினா எண். 762 திரு. கு. ரமணி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கோவை மருத்துவக்கல்லூரி மருத்துவமனை சவக் கிடங்குக்கு குளிர்பதன வசதி செய்யப்படவில்லை என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில் எவ்வளவு காலமாக அது செய்யப்படாமலிருக்கிறது?

(இ) அதன்மீது அரசு என்ன நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) ஆம்

(ஆ) மற்றும் (இ) இச்சவக் கிடங்கை குளிர்பதன வசதி செய்ய ரூ. 2.05 லட்சம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இதற்கான துவக்கப் பணிகளைத் தலைமைப் பொறியாளர் செய்து கொண்டு வருகிறார்.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, இந்தச் சவக்கிடங்கில் குளிர் பதன ஏற்பாடு செய்வதற்காக எவ்வளவு பணம் அனுமதிக்கப்பட்டிருக்கிறது என்ற கணக்கை இப்பொழுது அமைச்சர் அறிவித்துள்ளார். 3 ஆண்டுகளுக்கு மேலாக அந்தக் காரியம் செய்யப்படாமலிருக்கிறது. மனிதன் இறந்து போனதற்குப் பிறகு, அந்தச் சடலத்தைக் கொண்டு போய் ஓரிடத்தில் வைத்தால், அங்கு குளிர் பதன வசதி செய்யவில்லையென்றால், எவ்வளவு மோசமான நிலைமை ஏற்படும். சுகாதாரத்திற்குக் கெடுதல் ஏற்படும்? படிக்கின்ற மாணவர்கள் அந்த இடத்திற்குப் போய், எப்படி சவத்தைக் கையாளுவார்கள் என்பது அமைச்சருக்கு நன்கு தெரிந்த விஷயம். இவ்வளவு நீண்ட காலம் இப்படி ஊறப் போட்டு வைக்கக் காரணம் என்ன? எவ்வளவு டைமுக்குள்ளே அதை வைத்து முடிக்க முடியும் என்பதை அமைச்சர் சொல்ல முடியுமா?